## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2016

---

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு விடயங்கள் தொடர்பான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானதாக தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 நிதிக்கூற்றுகள் சமர்பித்தல்

---

2003 ஜூன் 02 ஆம் திகதி பீஈடி/12 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் பிரகாரம் கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை 2018 ஜூன் 05 திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை.

### 2.2 கணக்கு ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணல்

---

கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான கணக்கு ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நீடித்தல்

---

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விவரங்கள் கீழே காணப்படுகின்றன.

| சொத்துக்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 5,808,810,849 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 284,751,569 |
| மொத்த சொத்துக்கள் | 6,093,562,418 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,072,869,176 |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | 375,662,227 |
| மொத்த பொறுப்புக்கள் | 1,448,531,403 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 4,645,031,015 |
| மொத்த பொறுப்புக்கள் | 6,093,562,418 |
| மொத்த வருமானம் | 542,304,208 |
| மொத்த செலவுகள் | 764,540,805 |
| பற்றாக்குறை | 222,236,597 |

**2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் விடயங்களுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்பிக்கபடாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| எரிபொருள் செலவு (அலகொல்ல மற்றும் கொடகங்க ஆகிய தோட்டங்கள் தொடர்பாக) | 79,602 | பில்பத்திரங்கள் மற்றும் ஓட்ட அட்டவணைகள் |
| பலவினச் செலவுகள் (ஹுன்னஸ்கிரிய,அலகொல்ல ஹெயா பார்க் ஆகிய தோட்டங்கள் தொடர்பாக) | 405,208 | பில்பத்திரங்கள் |

**2.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

2015 மே 25 ஆம் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2016 மார்ச் 09 திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோக பூர்வ வாகனங்களுக்கு உரிமையில்லாத அலுவலர் ஒருவருக்கு 2016 ஜுன் முதல் செப்தம்பர் வரையான 4 மாத காலத்ததிற்காக ரூபா 50,000 வீதம் ரூபா 200,000 தொகை எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும் 12 தோட்ட தொகுதிகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முடிவுற்ற தேயிலை உற்பத்தியினை இணக்கஞ் செய்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பெருந்தோட்ட அமைச்சின் 2016 பயிர்ச் செய்கை தொடர்பான புள்ளி விவரம் சார் தகவல்கள் அறிக்கையின் பிரகாரம் ஹெக்டயர் ஒன்றின் மூலம் எதிர்பார்த்த வருடாந்த சராசரி தேயிலை உற்பத்தி 1695 கிலோ கிராம் எனினும் கூட்டுத்தாபனத்தின் தோட்டத் தொகுதிகளில் மீளாய்வாண்டின் போது ஹெக்டயார் ஒன்றிற்காக தேயிலை உற்பத்தி 176 கிலோ கிராம் முதல் 685 கிலோ கிராம் வரையான குறைந்த வீச்சில் இருந்தது.

(ii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 12 தோட்டங்களில் 10 தோட்டங்களின் முடிவுற்ற தேயிலை உற்பத்தி 2012 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டளவில் குறைந்திருந்ததுடன் அவற்றிடையே ஹாகல மற்றும் மிட்லண்ட் ஆகிய இரண்டு தோட்டங்களில் முடிவுற்ற தேயிலை உற்பத்தி குறிப்பிட்ட காலப்பகுதியில் சுமார் 49 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(iii) கூட்டுத்தாபனத்தின் தேயிலை உற்பத்தி செய்யும் நிலத்தின் அளவு ஆகிய 2,669 ஹெக்டயாரின் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்ய வேண்டிய நியம முடிவுற்ற தேயிலையின் அளவு 4,904,792 கிலோ கிராம் தொகையாக இருக்க வேண்டுமெனினும் கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது உற்பத்தி செய்திருந்த முடிவுற்ற தேயிலையின் அளவு 1,354,531 கிலோ கிராம்கள் ஆகும். அதாவது நியம உறபத்தியில் சுமார் 28 சதவீதம் ஆகும்.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 2,669 ஹெக்டயார் அளவு நிலத்தில் தேயிலை பயிர்ச் செய்கைக்காக வெளிப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு 1,778 ஹெக்டயார்கள்வழங்கியிருந்ததுடன் அது தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2015 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் போது வெளி பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கியிருந்த நிலத்தின் அளவு 18 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் அவர்களினால் வழங்கப்பட்டிருந்த தேயிலை கொழுந்துகளின் எண்ணிக்கை 17,075 கிலோ கிராமினால் அதாவது 15 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ii) வெளி சாராரினால் பராமரிக்கப்பட்டு வரும் நிலத்தின் அளவின் மூலம் வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட வேண்டிய நியம தேயிலை உற்பத்தி 1,997,181 கிலோகிராம் தொகை எனினும் வெளி சாராரினால் மீளாய்வாண்டின் போது அவற்றில் 5 சதவீத எண்ணிக்கை மாத்திரமே உற்பத்தி செய்திருந்தனர். அதன் பிரகாரம் வெளி சாராருக்கு வழங்கியிருந்த பரப்புகளின் மூலம் உச்ச மட்ட உற்பத்தி ஒன்றினை பெற்றுக் கொள்வதற்கு ஏற்றவிதமாக தேவையான நடவடிக்கைகள் கடைபிடித்தல் தொடர்பாக முகாமையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வண்டின் போது 12 தோட்ட தொகுதிகளின் மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான தேயிலை உற்பத்தியினை இணக்கஞ் செய்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்காக ஒவ்வொரு தோட்டத் தொகுதிக்கும் வழங்கியிருந்த தேயிலை உற்பத்தி இலக்கு 50,000 கிலோ கிராமிற்கும் 487,100 கிலோ கிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. அந்த தோட்டத் தொகுதிகளில் உள்ளவாறான தேயிலை உற்பத்தி 25,774 கிலோ கிராம் இற்கும் 320,621 கிலோ கிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் அதாவது 35 சதவீதம் முதல் 77 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. 35 சதவீத விகிதாசாரம் கொடகங்க தோட்டத் தொகுதியில் பதிவாகியிருந்தது.

(ii) 2013 ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்தினால் தோட்டத்தொகுதிகளுக்கு வழங்கியிருந்த மதிப்பிடப்பட்ட தேயிலை உற்பத்தியினை ஒரு தோட்டத் தொகுதிகளுக்கும் நெருங்க முடியாதிருந்த போதும் இது தொடர்பாக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளாமல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போதும் உயர்ந்த இலக்குகளை வழங்கியிருந்த தென அவதானிக்கப்பட்டது.

(ஈ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 12 தோட்டங்களில் மீளாய்வாண்டின் போது முடிவுற்ற தேயிலை கிலோ ஒன்றின் பங்களிப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மறை பெறுமதி ஒன்றினைப் பெற்றிருந்ததுடன் அது ரூபா 28 முதல் ரூபா 467 வரையான வீச்சில் காணப்பட்டது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் ஒரு கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்த போது மேற்கொள்வற்கு நேரிடும் ஆரம்ப கிரயம், விற்பனை வருமானத்தின் மூலம் அணவல் செய்ய இயலாத நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது.

(உ) 2016 ஆண்டு தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும் வலஹந்துவ தோட்டத் தொகுதியில் இறப்பர் பால் உற்பத்தி, விற்பனை மற்றும் இலாபம் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) வலஹந்துவ தோட்டத் தொகுதியில் இறப்பர் பால் உற்பத்தியின் மூலம் கிடைத்த இலாபம் 2011 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 6,803,694 இனால் அதாவது 140 சதவீததினால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் 2011 ஆண்டிற்கு ஒப்பாக விளைச்சல் 24 சதவீதத்தினால் குறைந்திருந்ததுடன் இறப்பர் விற்பனை விலை 52 சவீதத்தினால் குறைவடைதல் மற்றும் அலகு ஒன்றின் உற்பத்தி கிரயம் 50 சதவீதத்தினால் அதிகரித்தல் இலாபம் வீழ்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது.

விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | விளைச்சல் | விற்பனை பெறுமதி | உற்பத்தி கிரயம் | இலாபம்/ (நட்டம்) |
|---|---|---|---|---|
| | கி.கி. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 2011 | 49,333 | 469 | 240 | 11,318,050 |
| 2012 | 39,219 | 378 | 289 | 3,405,404 |
| 2013 | 44,863 | 344 | 325 | 845,665 |
| 2014 | 40,741 | 259 | 337 | (3,097,683) |
| 2015 | 36,810 | 231 | 354 | (4,513,701) |
| 2016 | 37,523 | 222 | 361 | (4,514,356) |

(ii) சராசரியாக ஹெக்டயர் ஒன்றிற்கு காணப்பட வேண்டிய நியம இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 32,500 தொகை எனினும் வலஹந்துவ தோட்டத் தொகுதியில் ஹெக்டகயர் ஒன்றில் காணப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 20,558 ஆகும். அதாவது நியம எண்ணிக்கையில் 63 சதவீதமாகும்.

(iii) 2014 ஆண்டின் போது இலங்கையில் ஹெக்டயார் ஒன்றின் இறப்பர் உற்பத்தி 914 கிலோகிராம் எனினும் மீளாய்வாண்டின் போது வலஹந்துவ தோட்டத் தொகுதியில் ஹெக்டயார் ஒன்றின் இறப்பர் உற்பத்தி 577 கிலோ கிராம் வரை குறைவடைந்திருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் 10 தோட்டத் தொகுதிகளை சேர்ந்த அகற்றப்பட்ட பழுதடைந்த இரும்பு பொருட்கள் 500 தொன் அலகுகளாக வெவ்வேறு இனங்கானப்பட்டிருந்த போதிலும் விடயங்களாக அல்லது தொகுதிகளாக பெறுமதி மதிப்பீடு செய்யாமல் பொதுவாக இரும்பு கிலோ கிராம் 01 ரூபா 35 வீதம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டமையால் இந்த பழுதடைந்த பொருட்களுக்குள் அடங்கியிருந்த மின்சார மோட்டர், லேத் இயந்திரங்கள், டிரக்கடர், டெய்லர் மற்றும் என்ஜின்கள் போன்ற உயர்ந்த பெறுமதியுடைய பொருட்களை குறைத்து பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அந்த 500 தொன், கிலோ கிராம் 1 ரூபா 35 வீதம் விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக் கொள்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானம் சுமார் ரூபா 17,500,000 தொகை எனினும் பெற்றிருந்த உள்ளவாறான வருமான ரூபா 2,177,120 தொகை மாத்திரம் ஆக இருந்ததுடன் அவை மதிப்பிட்டு வருமானத்தில் 12 சதவீதமாக இருந்தது.

(ஆ) கலேபொக்க தோட்ட தொகுதி நெல்லுமலை பிரிவில் பரப்பு ஒன்றிற்கான மாதம் ஒன்றிற்காக 4 தடவைகள் 6 பரப்புகளுக்காக ஆண்டிற்கான தேயிலை கொழுந்து பரித்தல் 288 தடவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் கடந்த 3 ஆண்டுகளின் தரவுகளை பரிசோதனை செய்தபோது வருடாந்தம் பரித்தல்கள் 190 தடவைகளை அண்மித்த தொகை மாத்திரம் செயற்படுத்தியிருந்தென அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை தேயிலை சபையினால் 2003 மார்ச் மாதத்தில் வெளியிட்டிருந்த அறிவுரை சுற்றறிக்கை 04/03 இன் பிரகாரம், தேயிலை இலை 4-5 வெளிவந்தவுடன் பிரதான அரும்பு வளர்ச்சி அடைதல் செயற்படாது விடும். அது தேயிலை விளைச்சளுக்கு மற்றும் முடிவுற்ற தேயிலையின் பண்புகள் குறைவடைவதற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகிறது. முடிவற்ற தேயிலை உற்பத்தியில் நியம கழிவுத் தேயிலை 3 சதவீதமாக இருந்த போதும் பண்புத்தன்மை குறைந்த கொழுந்து கலேபொக்க தொழிற்சாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது தொழிற்சாலையின் கழிவு தேயிலை 6 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஈ) கலேபொக்க தோட்ட தொகுதியை சேர்ந்த தொழிற்சாலையின் கூரையை பழுதுபார்த்தல் தொடர்பாக ரூபா 5 மில்லியன் தொகையை அண்மித்த பெறுமதியுடைய ஒப்பந்த வேலை முறையான உடன்படிக்கை ஒன்று இன்றி 2015 ஜூலை 25 திகதி ஏற்றுக் கொள்ளல் கடிதமொன்றின் மூலம் மாத்திரம் ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தை நிறைவேற்றி திருப்பி ஒப்படைக்க வேண்டிய குறித்த கால எல்லை ஒன்று குறிப்பிடப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட விடயம் பூரத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) கம்மடுவ தோட்ட தொகுதியைச் சேர்ந்த 0.152 இற்கான தரைப்பகுதி குத்தகை உடன்படிக்கை 1024 இன் மூலம் 1999 ஜூலை 01 திகதி கூட்டுத்தாபனத்தினால் தனியார் கம்பனி ஒன்றிற்கு 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. வருடாந்தம் குத்தகை அதிகரித்தல் தொடர்பான நிபந்தனை உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன் 1995 ஜூலை 21 திகதி எஸ்ஏஜ/ஏ/4/34 இலக்கம் கொண்ட ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை 50 சதவீதம் குத்தகை அதிகரித்தல் கூட்டுத்தாபனத்தினால் அறவிடப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை ரூபா 1,936,688 தொகையாக காணப்பட்டதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் துணைப் பாதைகளின் பராமரிப்புக்காக கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,999,500 தொகையும் உட்பட ரூபா 3,936,188 இற்கான தொகையொன்று கூட்டுத்தாபனத்தினால் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஊ) விஹாரகல தோட்ட தொகுதியில் நிட்வூட் பகுதியை சேர்ந்த 232 ஏக்கர் 03 ரூட் 02 பர்சஸ் நிலப்பகுதி 1992 ஏப்ரல் 08 திகதி முதல் குத்தகை அடிப்படையில் வெளி ஒருவருக்கு கொடுத்திருந்ததுடன் 2007 ஆண்டு முதல் இந்த குத்தகைதாரர் குத்தகை செலுத்துவதை பகிஷ்கரித்திருந்த காரணத்தினால் 2011 ஆண்டு முதல் தனியார் கம்பனி ஒன்றிற்கு மீண்டும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது கூட்டுத்தாபனத்தின் காணிப் பகுதியின் அறிக்கையின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆரம்ப குத்தகையாளரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை குத்தகை தொகை ரூபா 1,559,250 தொகையாக இருந்தது. தற்போது குத்தகை கொடுத்திருந்த நிலப் பகுதியில் சுமார் 110 ஏக்கர் அங்கீகாரமற்ற குடியிருப்பாளர்களினால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) கலேபொக்க தோட்டத் தொகுதியில் 218 ஹெக்டயார் தேயிலை பயிர்ச் செய்கை 50 வருடங்களை விட பழமையான காரணத்தினால் அப் பகுதியில் தேயிலை செடிகளை அகற்றி மீண்டும் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஒன்று காணப்பட்ட போதிலும் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை மிகைத்துள்ள பயிர்களைகளை அகற்றி மீண்டும் பயிர்செய்கை மேற்கொள்வதற்காக வேண்டிய முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலேபொக்க தொழிற்சாலையில் தேயிலை உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பாக "Michi Shifter" இயந்திரத்தின் கழிவுத் தேயிலை அகற்றும் துணைக் கருவி ஒரு வருடத்தை விடக் கூடிய காலம் முதல் செயற்படாத நிலையில் காணப்படல் மற்றும் அதன் மூலம் கழிவு தேயிலை அகற்றப்படாத காரணத்தினால் உற்பத்தி செய்யப்படும் தேயிலைக் கழிவுத் தேயிலை அடங்கி இருந்ததென தேயிலை மாதிரி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் மூலம் தொடர்ச்சியாக சுட்டிகாட்டியிருந்தது. அவ்வாறாயினும் அந்த இயந்திரத்தை பழுதுபார்பதற்கு தேவையான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2011 அக்டோபர் 12 ஆம் திகதிய 115 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் கம்மடுவ தோட்டத் தொகுதியில் 222 ஹெக்டயார் நிலப் பகுதி ஒரு வருடத்தில் ரூபா 694,000 இற்கான தொகைக்கு 30 வருடங்களுக்காக கம்மடுவ பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியிருந்ததுடன், 2011 ஆண்டு முதல் 2016 அக்தோபர் 11 திகதி வரை அதற்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை தொகை ரூபா 3,470,000 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

## 3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தோட்டத் தொகுதியில் புதிய தேயிலை பயிர்ச் செய்கை ஆரம்பிக்கபடாத காரணத்தினால் கலேபொக்க தோட்டத் தொகுதிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட தேயிலை நாற்று மேடை ஒன்றில் 26,533 கன்றுகள் பயிர் செய்வதற்காக வழங்கியிருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதி அளவில் அதற்காக ரூபா 809,939 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இந்த விதை கன்றுகள் மீண்டும் பயிர் செய்ய முடியாதவாறு நிலத்தோடு வேர் பிடித்திருந்ததென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) தனியார் தேயிலை தொழிற்சாலை ஒன்றினால் 2016 ஜனவரி, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் கூட்டுத்தாபனத்துடன் சமமான கொழுந்து தேயிலை வழங்குனர் ஒருவரான மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு வழங்கியிருந்த விலையை

விட குறைந்த விலைக்கு கூட்டுத்தாபனத்தின் கொழுந்து தேயிலை 407,558 கிலோ கிராமுக்காக வழங்கியிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 2,404,407 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(இ) தலைமை அலுவலகத்தின் அங்கீகாரமின்றி மற்றும் பெறுகைகளை செயற்பாடுகளில் இருந்து விலகி எலகொல்ல தோட்டத் தொகுதியில் தோட்ட அத்தியட்சகரினால் அவருக்கு அங்கிகாரம் வழங்கியிருந்த செலவினத் தொகையின் எல்லையினை மிகைத்து சந்தை விலை விட கூடிய விலை செலுத்தி தனியார் தோட்ட தொகுதி ஒன்றில் இருந்து 36 லீற்றர் இரசாயன பொருட்கள் கொல்வனவு செய்திருந்த காரணத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 21,982 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 3.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலேபொக்க தொழிற்சாலையில் இரண்டு மாடிகளை கொண்ட கொழுந்துகளை சுருக்கும் பகுதியில் 23,585 கிலோ கிரேமிற்கான உச்ச மட்ட உற்பத்தி ஒன்றிற்காக பச்சை கொழுந்து 32,756 கிலோகிராம் சேகரிப்பதற்கு இயலுமாக இருந்த போதிலும், 11,600 கிலோ கிராம் கொழுந்து மாத்திரம் உற்பத்தி செய்முறைக்காக ஈடுபடுத்தபட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒட்டு மொத்த இயலளவில் 64 சதவீதம் குறைபயன்பாட்டு மட்டத்தில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது

(ஆ) கலேபொக்க தோட்டத் தொகுதிக்கு சொந்தமான பங்களா மற்றும் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் பராமரிக்கபடாமையால் அவை பாரிய அளவில் சீரழிவு ஏற்பட்டுக் காணப்பட்டதுடன் பல பரப்புகளை சேர்ந்த 8 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் பங்கலாக்கள் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்த என 2017 பெப்ரவரி 02 திகதி மேற்கொள்ள வெளிக்கள பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) தேயிலை உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்த ஹுன்னெஸ்கிரிய தேயிலை தொழிற்சாலையில் தேயிலை கொழுந்து அரைபதற்காக பயன்படுத்தப்படும் பொறித் தொகுதிகள், மின் பிறப்பாக்கிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மற்றும் ஹுன்னஸ்கிரிய மேல் பகுதியில் அமைந்துள்ள உதவி தோட்ட அத்தியட்சகர் பங்களா பல வருட காலம் முதல் செயற்படுத்தப்படாமல் காணப்பட்டதென 2017 பெப்ரவரி 02 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) கலேபொக்க தொழிற்சாலையின் அரைக்கும் பகுதியில் (CTC) முறையில் கொழுந்துகள் அரைக்கும் 03 முறைமைகள் காணப்பட்டதுடன், அவற்றில் முதலாம் முறைமை பல வருடங்கள் முதல் முற்றாக பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. மேலும், இரண்டாம் அரைத்தல் முறைமை ஒரு மணித்தியாலத்திற்கு 1300 கிலோ கிராம் இயலளவு உடைய அரைத்தல் இயந்திரம் வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 2017 பெப்ரவரி 02 திகதி அளவில் திருத்த வேலைக்காக கழற்றி இருந்ததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் வரை திருத்த வேலைக்காக அனுப்பியிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த இரண்டு அரைக்கும் இயந்திரங்களும் தொழிற்சாலையின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை. மேலும் ஒரு மணித்தியாலத்திற்கு 1200 கிலோ கிராம் நியம இயலளவு கொண்ட மூன்றாவது அரைத்தல் முறைமையானது ஒரு மணித்தியாலத்திற்கு 650 கிலோ கிராம் அதாவது நியம இயலளவை விட 54 சதவீத அளவு குறைந்த இயலளவினை பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(உ) 1983-1985 காலப்பகுதி தொடர்பாக பர்கஸன் தோட்ட பெயர் பட்டியலின் படி கம்மடுவ தோட்ட தொகுதிக்கு சொந்தமாயிருந்த நிலத்தின் அளவு 1624 ஹெக்டயர்கள் காணப்பட்டதுடன், அவற்றில் குத்தகை உடன்படிக்கை 371 இன்

மூலம் கம்மடுவ பெருந்தோட்ட கம்பனிக்கு வழங்கியிருந்த காணியின் அளவு 573 ஹெக்டயர்களாகும். அதன் பிரகாரம் மீதியினை 1051 ஹெக்டயர்களை இணங்கண்டு பயன்படுத்துவதற்கு கூட்டுதாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 1994 ஏப்ரல் 21 திகதி 815/டீ ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமாணியின் மூலம் பெருந்தோட்ட கூட்டுதாபனத்திற்கு சாட்டப்பட்டிருந்த பர்த் தோட்டத் தொகுதியில் வோடர் லாண்ட் பிரிவின் 01 ரூட் 37.2 பேர்ச்சஸ் அமைந்துள்ள பங்களா மற்றும் 4.33 ஏக்கர் தென்னை பயிர்ச் செய்கை என்பன தற்போது தனியார் கம்பனி ஒன்றினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் இந்த ஆதனங்களின் தனியார் கம்பனிக்கு சட்டரீதியாக சாட்டுதல் செய்தல் தொடர்பான தகவல்கள் ஏதும் கூட்டுத்தாபனத்திடம் காணப்படாததுடன் அந்த ஆதனங்களை மீண்டும் உரித்தாக்குவதற்காக அல்லது பொருத்தமான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) கலேபொக்க தொழிற்சாலையின் உலர்த்தல் பிரிவில் காணப்பட்ட உற்பத்தி இயலளவு ஒரு மணித்தியாலத்திற்கு தேயிலை கொழுந்து 682 கிலோ கிராமாக காணப்பட்டதுடன் 2016 ஆண்டின் போது கொழுந்து பரித்தல் மேற்கொள்ளப்பட்ட 251 நாட்கள் பூராகவும் மேற்கூறிய இயலளவில் 1,368,954 கிலோ கிராம் பச்சை கொழுந்து உற்பத்தி அலுவலகளுக்காக ஈடுபடுத்தக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது பரிக்கப்பட்ட கொழுந்து எண்ணிக்கை 1,337,683 கிலோ கிராம் எனினும் உள்ளீட்டு செயற்பாட்டிற்காக 502,504 கிலோ கிராம் தேயிலை கொழுந்து மாத்திரம் அதாவது (37 சதவீதம்) ஈடுபடுத்தபட்டிருந்ததுடன் மீதிக் கொழுந்து தொகையினை வெளி கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

### 3.6 பதவியணி நிருவாகம்

2003 ஜூன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சி சுற்றறிக்கையின் 9 ஆம் பிரகாரம் ஒவ்வொரு பதவிகளுக்கும் தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று கூட்டுதாபனத்திடம் காணப்படவில்லை.

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் 14 தோட்ட தொகுதிகள், பிராந்திய அலுவல்கம் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளும் அணவல் செய்யும் விதமாக 28 கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 5 தோட்டத் தொகுதிகள் தலைமை அலுவலகத்தின் 2 பிரிவுகள் மாத்திரம் பரிசோதனை மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை சமர்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வும் பிரிவு தமது திட்டமிட்ட இலக்கினை நெருங்கியிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வுக் குழு

2010 திசெம்பர் 14 திகதி 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 03 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) | ஆவணங்கள் பேணப்படல் | அடிப்படை ஆவணங்கள் உரிய முறையில் பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | பாதீட்டு கட்டுபாடு | பாதீட்டு இலக்குகளை நிறைவேற்றுதலை மேற்பார்வை செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்படல் மற்றும் செயலாற்றுகை அதிகரிப்பதற்காக உரிய தொழில்நுட்ப கருவிகள் மற்றும் செயற்பாடுகள் பயன்படுத்தாமை. |
| (இ) | தொழிற்சாலை இயந்திர பயன்பாடு | உச்ச மட்டத்தில் இயலளவைப் பயன்படுத்தாமை.<br>ஐஐ |
| (ஈ) | சொத்துக்கள் பயன்பாடு | உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களின் குறை பயன்பாடு மற்றும் உரிய காலத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை. |
| (உ) | பயிர் செய்கைகளை பராமரித்தல் | உச்சமட்ட விளைச்சலை பெறும் விதத்தில் தோட்டங்களில் பயிர்செய்கை பராமரிக்காமை. |
| (ஊ) | ஊழியர் முகாமைத்துவம் | ஊழியர்களுக்கு உரிய முறையில் பொறுப்புக்கள், கடமைகள் சாட்டப்பட்டிருக்காமை. |
| (எ) | உள்ளக கணக்காய்வு | உள்ளக கணக்காய்வுத் திட்டம் எதிர்பார்த்த விதமாக செயற்படுத்தாமை. |